


**20.9.2024**

தலைப்புச் செய்திகள்

1. விஸ்வகர்மா திட்டம் கைவினைஞர்களின் திறனை ஊக்குவித்து, பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. ஊரக பொருளாதாரத்தை வலுப்படுத்த வேளாண் பணிகள் நவீனப்படுத்தப்பட வேண்டுமென்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழ்நாட்டில், பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை உயர்த்தப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. நேபாளம், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய வெளிநாடுகளுக்கு இந்திய ரயில்வே உணவு சுற்றுலா கழகத்தின் சார்பில் விமான சுற்றுலா விரைவில் தொடங்கப்படவுள்ளது.

5. இந்தியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 92 ரன்னுக்கு 6 விக்கெட்டை இழந்து தடுமாறி வருகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் - விஷ்வகர்மா

விஸ்வகர்மா திட்டம் கைவினைஞர்களின் திறனை ஊக்குவித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹாராஷ்டிர மாநிலம் வார்தாவில் விஷ்வகர்மா திட்ட பயனாளிகளுக்கு கடனுதவி மற்றும் சான்றிதழ்களை வழங்கி இன்று உரையாற்றுகையில் உலக அளவில் நம்நாட்டின் ஜவுளி தொழிற்சாலை முன்னோடியாக திகழ்வதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின் மூலம் எண்ணற்ற கைவினைஞர்கள் பயனடைந்துள்ளதாக எடுத்துரைத்தார்.

இந்திய ஜவுளித்துறை பிரிவில் ஆயிரம் ஆண்டுகளின் பழம் பெருமையை மீட்டெடுப்பதே அரசின் இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் - அமெரிக்கா

பிரதமர் திரு. நரேந்திரமோடி 3 நாள் அரசுமுறை பயணமாக நாளை அமெரிக்கா புறப்படுகிறார்.

இந்த பயணத்தின் ஒருபகுதியாக வில்மிங்டன்னில் நடைபெறும் 4-வது வருடாந்திர குவாட் தலைவர்கள் உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

அடுத்த ஆண்டிற்கான குவாட் உச்சிமாநாட்டை இந்தியா ஏற்று நடத்தவுள்ள நிலையில், பிரதமர் இதில் பங்கேற்பது முக்கியத்துவம் பெறுகிறது.

நியூயார்க்கில் நாளைமறுநாள் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றும் பிரதமர், வரும் 23-ம் தேதி ஐ.நா. சபையில், எதிர்காலம் குறித்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்கிறார்.

பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் இந்த உச்சிமாநாடு, சிறந்த எதிர்காலத்திற்கான பல்முனை தீர்வுகள் என்ற கருப்பொருளில் நடைபெறுகிறது.

இந்த பயணத்தின் போது பிரதமர், பல்வேறு உலகத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதோடு பரஸ்பர நலன்சார்ந்த விஷயங்கள் குறித்தும் விவாதிக்கிறார்.

அமெரிக்காவின் முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்களுடன், செயற்கை நுண்ணறிவு, மின் குறைகடத்தி, உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் பிரதமர் கலந்துரையாடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

ஊரக பொருளாதாரத்தை வலுப்படுத்த தொடக்க வேளாண் பணிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ராஞ்சியில் தேசிய வேளாண் நிறுவனத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் வகையில், குப்பைகளை வளமாக மாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அழகு சாதனங்கள் மற்றும் மருந்து தொழிற்சாலைகளில் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் கண்டறியப்படுவதன் அவசியத்தையும் குடியரசு தலைவர் வலியுறுத்தினார்.

நாட்டின் பிசின் மற்றும் பசை உற்பத்தியில் 55 சதவிகிதம் ஜார்கண்டிலிருந்து பெறப்படுவதாக எடுத்துரைத்த அவர், பழங்குடியின மக்களுக்கு இது வாழ்வாதாரமாக திகழ்கிறது என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டில் இன்னும் 2 ஆண்டுகளில் நக்சல் தீவிரவாதத்தை வேரோடு களைய அரசு உறுதி பூண்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட சட்டீஸ்கட் மாநிலத்தை சேர்ந்த 55 பேருடன் இன்று கலந்துரையாடிய அமைச்சர், பஸ்தார் பகுதியை தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் நக்சல் தீவிரவாதம் அகற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வன்முறையை கைவிட்டு சரணடைய தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்த அமைச்சர், தமது கோரிக்கையை ஏற்காவிட்டால், அவர்களுக்கு எதிரான நடவடிக்கை விரைவில் தொடங்கப்படும் என எச்சரித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

நித்தியானந்தராய்

நாட்டின் புதிய குற்றவியல் சட்டங்களை உள்வாங்கி, குற்றவாளிகளை தண்டிப்பதற்கு பதிலாக, குற்றங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்தராய் வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய காவலர் அகாடமியில் இந்திய காவல்துறை அதிகாரிகள் பயிற்சி நிறைவு விழாவில் இன்று

உரையாற்றியஅவர், சைபர் குற்றங்கள் பெரும் சவாலாக உருவெடுத்துள்ள இத்தருணத்தில் தொழில்நுட்பத்தின் உதவியுடன் அவற்றை எதிர்கொள்வதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

காவலர்கள் செயல்முறையை வலுப்படுத்துவதற்காக சைபர் தடயவியல் ஆய்வகம், காவலர்கள் தொழில்நுட்ப இயக்கம் உள்ளிட்ட பல்வேறு நவீன திட்டங்களை உள்துறை அமைச்சகம் செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

தீவிரவாதமும், நக்சல் பயங்கரவாதமும் ஏறத்தாழ அகற்றப்பட்ட சூழலில், அவற்றை வேரோடு களைய இளைய காவல் அதிகாரிகள் உறுதியுடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இப்பயிற்சி நிறைவு நிகழ்வில் 188 ஐ.பி.எஸ். அதிகாரிகள், 19 வெளிநாட்டு அதிகாரிகள், உட்பட 207 இளம் பயிற்சியாளர்கள் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

ககன்யான் விண்கலம்

ககன்யான் விண்கலம் இந்த ஆண்டு இறுதிக்குள் விண்ணில் செலுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் திரு. சோம்நாத் தெரிவித்துள்ளார்.

பெங்களுருவில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சந்திரயான் - 4 திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள நிலையில் இதுதொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் சிலமாதங்களில் தொடங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

திருப்பதி லட்டு

திருப்பதி கோவில் லட்டுகளில் விலங்குகளின் கொழுப்புகள் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுவது குறித்து மத்திய உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கவலை வெளியிட்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதுகுறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

திருப்பதி ஸ்ரீ வெங்கடேஷ்வர சுவாமி திருக்கோவிலில் விநியோகிக்கப்படும் லட்டுகளில் சேர்க்கப்படும் நெய்யில், விலங்கு கொழுப்பு உள்ளதாக தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் கால்நடை ஆய்வக ஆராய்ச்சியில் வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - கல்வி உதவித்தொகை

தமிழகத்தில் பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகையை இருமடங்காக உயர்த்தி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி தொடக்கப்பள்ளி மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கு உதவித்தொகை இரண்டாயிரம் ரூபாயாகவும்,

நடுநிலைப்பள்ளி மாணாக்கருக்கு 6 ஆயிரம் ரூபாயாகவும்,

9 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கான உதவித்தொகை 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

கல்லூரி பட்டப்படிப்பு மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி உதவித்தொகை 12ம் ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - நதிகள் சீரமைப்பு

சென்னை நதிகள் சீரமைப்பு தொடர்பாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று ஆலோசனை மேற்கொண்டார்

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையில் கூவம், அடையாறு, கொசஸ்தலை ஆறுகள் சீரமைப்பு பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மாநில அமைச்சர்கள் திரு. மா.சுப்ரமணியன், திரு.தா.மோ. அன்பரசன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

**IRCTC**

இந்திய ரயில்வே உணவு சுற்றுலா கழகத்தின் சார்பில் சென்னை, திருச்சியிலிருந்து,

நேபாளம், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு விமான சுற்றுலாவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இதன் தென்மண்டல பொது மேலாளர்

திரு. **K.** ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், ராஜஸ்தான், காஷ்மீர், தரம்சாலா, அமிர்தசரஸ், ஷீரடி, கேங்டாக், டார்ஜிலிங், வைஷ்ணவ் தேவி திருக்கோவில் உள்ளிட்ட உள்நாட்டு சுற்றுப்பயணங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

அதேபோல் ரயில் சுற்றுலா மூலம் காஷ்மீர், குல்மார்க், பஹல்காம், காசி, நேபாளம் பகுதிகளுக்கு மக்கள் அழைத்துச் செல்லப்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

துரைமுருகன்

கூட்டுறவு உள்ளாட்சி போன்ற மக்களுக்கான சேவை அமைப்புகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகளில் முறைகேடுகள் முற்றிலும் தடுக்கப்பட வேண்டும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் ஒருகோடி ரூபாய் மதிப்பீட்டிலான 24 கடைகளை இன்று திறந்துவைத்து பேசிய அவர், காட்பாடி காங்கேயநல்லூரிலிருந்து வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ரகுபதி

நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்குபெற சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசு தலைவர் உள்துறையின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இம்மசோதா தொடர்பான உள்துறை அமைச்சகத்தின் கேள்விகளுக்கு உரிய பதில் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஸ்டெர்லைட்

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை வன்முறை சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு பதவி உயர்வு எதுவும் வழங்கப்படவில்லை என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளங்களில் வெளிவரும் தகவல்கள் தவறானவை என்றும் அவர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிருஷ்ணகிரி வாய்ஸ்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தூய்மையே சேவை நடைபயணம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி. சரயு இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி, ஒன்றரை கோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக, இதன் மேலாளர் திரு. பெருமாள் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

சென்னை சேப்பாக்கத்தில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று பங்களாதேஷ் தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 7 விக்கெட் இழப்பிற்கு 96 ரன்னுடன் தடுமாறி வருகிறது.

முன்னதாக 6 விக்கெட் இழப்பிற்கு 339 ரன் என்ற நேற்றைய முதல் இன்னிங்ஸ் ஸ்கோருடன் ஆட்டத்தை தொடர்ந்த இந்தியா 376 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அஸ்வின் 113 ரன் எடுத்தது ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

❖❖❖❖❖❖❖❖❖